# சம்பளப்பிரச்னைக்கு பரிகாரம் சமதர்மமே!

VIDUTHALAI REGD-No: M.4789

விடுதலை

நிறுவனம்: 1935

திராவிடர் தமிழ்த் தினசரி.

மலர் 25] சென்னை: சோபகிருது ஷூ மாசிமீ 17உ ※ (29—2—64) சனி ※ [இதழ் 667

வெளியூர் (1—3—64) ஞாயிறு ; விலை 7 காசுகள்

## தமிழக அரசு ஊழியர்களின் கிராக்கிப்படியை உயர்த்த மத்தியஅரசிடம் உதவி

### வற்புறுத்தியிருப்பதாக முதலமைச்சர் அறிவிப்பு!

### ஊழியர்களின் விதவைகளுக்குப் பென்ஷன் திட்டம் பரிசீலனை

சென்னை, பிப், 29...

"மாநில அரசாங்கத்தின் ஊழியர்களுக்கு நிவாரணம் அளிக்கும் பிரச்னை அரசாங்கத்தின் கவனத்தில் எப்போதும் இருக்கிறது.

"மாநில அரசாங்க ஊழியர்களின் கிராக்கிப்படியை உயர்த்துவதற்கு நிதியுதவி தர வேண்டுமென்றும் தமிழக அரசாங்கம் மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தியிருக்கிறது"

என்று நேற்று தமிழக சட்டசபையில் முதலமைச்சர் பக்தவத்சலம் கேள்வி நேரத்தின்போது தெரிவித்தார்.

மத்திய-மாநில அரசாங்கங்களின் ஊழியர்களுக்கிடையேயுள்ள ஏற்றத் தாழ்வுகளைப்பற்றி உறுப்பினர்கள் கவலை தெரிவித்தனர் இதற்குப் பதிலளிக்கையிலேயே முதலமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்,

தமது ஊழியர்களின் விதவைகளுக்கு பென்ஷன் கொடுக்க மத்திய அரசாங்கம் ஏற்பாடு செய்திருப்பது பேரில் மாநில அரசாங்கமும் செய்யுமா? என்றொரு கேள்வி கேட்கப்பட்டது.

முதலமைச்சர் பதிலளிக்கையில் இப் பிரச்னை அரசாங்கத்தின் பரிசீலனையிலிருக்கிறது என்று கூறினார்.

மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் அரசாங்க சிப்பந்திகள் பதவியிலிருந்து விலகும் வயது 58 ஆக உயர்த்தப்படவில்லை என்றார்,

## இராணுவத்தினர் பென்ஷன்

சென்னை, பிப். 29...

கன்னியாகுமரி மாவட்டம் தக்கலைப் பகுதியில் வசிக்கும் இராணுவ. கடற்படை, விமானப்படை பென்ஷன்தாரர்களுக்குப் பென்ஷன் தொகையை, திருவனந்தபுரம் பென்ஷன் அதிகாரி தக்கலை உபகஜானாவில் 10-3-64 அன்று வழங்குவார்.

## தமிழக அரசின் 1964-65-க்கான பட்ஜெட்

ஒரு கண்ணோட்டம்

ரூபாய் கோடிக்கணக்கில்

| | |
|---|---|
| வரவினங்கள் | 137.48 |
| செலவினங்கள் | 140·82 |
| ஆக துண்டு விழும்தொகை | 3·34 |

## தமிழக அரசின் 1964-65-க்கான பட்ஜெட்

### சட்டசபையில் திரு. பக்தவத்சலம்கொண்டுவந்தார்

சென்னை, பிப். 29—

இன்று சென்னை அசெம்பிளியில் தமிழகத்தின் 1964—65-ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை (பட்ஜெட்) முதலமைச்சரும் நிதியமைச்சருமான திரு, பக்தவத்சலம் அவர்கள் கொண்டுவந்து விளக்கிப் பேசினார்.

முந்தைய ஆண்டைப்போல் இவ்வாண்டிலும் கல்விக்கும் திட்டப்பணிகளை விரைவில் நிறைவேற்றுவதற்கு அவசியமாகவும் கணிசமாக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

**கல்விக்கு சென்றஆண்டு ஒதுக்கியது ரூ. 28கோடி இவ்வாண்டு ரூ. 30.74 கோடிஒதுக்கியுள்ளனர்.**

இவ்வாண்டு எதிர்பார்க்கும்

வருமானம் ரூ, 137·48 கோடி

செலவு ரூ. 140·82 கோடி

ஆக துண்டு

விழுவது ரூ. 3·34 கோடி

என்று கூறிபுதிய ஆண்டில் செய்யப்படவிருக்கும் திட்டப் பணிகளைப்பற்றி விரிவாக அமைச்சர் எடுத்துரைத்தார்.

## காஷ்மீரில் புதிய அமைச்சரவை பதவியேற்றது!

### திரு. சதிக் முதலமைச்சராகத் தேர்வு!

ஜம்மு. பிப், 29—...

நேற்று பிற்பகல் ஜம்மு-காஷ்மீரில் புதிய அமைச்சரவை திரு. ஜி, எம். சதிக் தலைமையில் பொறுப்பேற்றது திரு,சதிக்குடன். திரு பி. டி தார் திரு மீர்காசிம் திரு திரிலோசன்டட் ஆகியோர் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டனர்.

காஷ்மீர் சதர்-இ-ரியசத் திரு கரண்சிங் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார் இதற்குமுன் தற்போதைய முதலமைச்சர் திரு சம்சுதின் ராஜினாமா செய்து விட்டார்.

தமதுஅமைசரவையில் மேலும் சில அமைச்சர்களைச் சேர்த்துக் கொள்ளப்போவதாகவும், மொத்தம் 7 அமைச்சர்களுக்குமேல் தம் அமைச்சரவையில் இருக்கமாட்டார்களென்றும், துணை அமைச்சரும் இருக்கமாட்டாரென்றும் முதலமைச்சர் திரு. சதிக் பத்திரிகையாளரிடம் தெரிவித்துள்ளார்'

புதிய அமைச்சரவையிலுள்ள நால்வரில் மூவர் பக்ஷிகுலாம் அமைச்சரவையிலிருந்தவர்கள் திரு. திரிலோசன்டட் என்பவர் மட்டும் புதியவர்

நேற்றுகாலை நடந்த சட்டசபை தேசிய மாநாட்டுக்கட்சிக் கூட்டத்தில் ஷம்சுதீனுக்குப் பதிலாக சதிக்தலைவராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார், முன்னாள் பிரதமர் பக்ஷிகுலாம் முகமது சதிக் பெயரை பிரரேபித்தார்.

புதிய அமைச்சரவை பதவியேற்கும்விழாவில் மத்திய அமைச்சர் திரு. லால்பகதூர் சாஸ்திரியும் கலந்துகொண்டார்.

## அதிகாரிகள்-ஊழியர்கள் அரசிடம் விசுவாசம் குன்றாது ஒத்துழைத்தல் வேண்டும்

### ரஷ்யாவில் தொழிலாளர்கள்-அதிகாரிகள் சம்பளத்தில் அதிக வேற்றுமையில்லை


### கடமை, கட்டுப்பாடு, ஒழுங்குமீறாத நடத்தையால்தான் உயர்வு பெறலாம்

### அரசியல் கட்சிகளின் வலையில் விழுந்து ஸ்டிரைக்கில் ஈடுபடாதீர்

### பாபநாசம் அஞ்சல் ஊழியர் மாநாட்டில் பெரியார் அறிவுரை

பாபநாசம், பிப். 29-

"அதிகாரிகள்-ஊழியர்களுக்கிடையே சம்பளத்தில் அதிக வித்தியாசம் இருப்பதாலேயே மனத்திருப்தி ஏற்படாமல் தொல்லையாகிறது; இந்த வித்தியாசம் குறைக்கப்படவேண்டும். சோஷ்யலிச சமுதாயம் அமைந்தால் சம்பள உயர்வு தானே கிடைத்து சமத்துவம் ஏற்படும். இதற்கு அரசாங்கத்துடன் ஒத்துழைக்க வேண்டும். கடமைகட்டுப்பாடுடன் ஒழுங்குமீறுதல் இன்றி அரசுக்கு விசுவாசமாக நடக்கவேண்டும். தற்போது அரசியல் கட்சிகளால் தூண்டிவிடப்பட்டு ஸ்டிரைக் போன்ற ஆகா வழிகளில் இறங்குவதால் பொதுமக்களுக்கே ஆபத்தாகியுள்ளது. ரஷ்யாவில் உழைப்பாளர்-அதிகாரிகள் சம்பள வேற்றுமையில்லாதது போன்ற நிலை இங்கும் ஏற்படும் அரசுடன் விசுவாசமாக ஒத்துழையுங்கள்"



—என்று பாபநாசத்தில் 9—2—64 ந்தேதி நடைபெற்ற அஞ்சல் இலாகா ஊழியர்கள் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துரையாற்றுகையில் தந்தை பெரியார் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

பாபநாசம், பிப். 29—

பாபநாசம் ஸ்ரீவித்தியாபாடசாலையில் பாபநாசம் கிளை தபால் ஊழியர்களின் சங்க ஆண்டுவிழா 9—2—64 அன்று மாலை 4 மணி அளவில் நடைபெற்றது.

விழாவிற்கு தஞ்சைமாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் கபிஸ்தலம் திரு. கருப்பையா மூப்பனார் அவர்கள் தலைமை வகித்தார்.

மாநாட்டினை சென்னை மாநில தபால் இலாகா டைரெக்டர் திரு. எம். கே. தீனதயாளன் பி. எஸ், சி. [ஆனர்ஸ்) அய், பி. எஸ், அவர்கள் திறந்து வைத்தார், மாநாட்டில் பல அதிகாரிகளும் உரை நிகழ்த்தினார்கள்,

#### தந்தை பெரியார் சிறப்புரை

தந்தை பெரியார் அவர்கள் மாநாட்டில் சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது;

தலைவர் அவர்களே! பேரன்புமிக்க தபால் இலாகா தலைமை அதிகாரி அவர்களே, மற்றைய அதிகாரிகளே. தபால் இலாகா தோழர்களே. தாய்மார்களே.

முதலில் நான் இந்த தபால் ஊழியர்கள் கூட்டத்திற்கு வருவதற்கு இஷ்டப்படவே இல்லை தப்பித்துக்கொள்ளப் பார்த்தேன் முடியவில்லை, இங்கு வந்த பிறகுதான் உணர்ந்தேன்.

இந்த மாநாட்டிற்கு வராது இருந்து இருப்பேனேயானால் என்னைப் போல ஒரு ஏமாந்த பைத்தியக்காரன் இல்லை என்றே கூறலாம். தலைமை வகித்துள்ள திரு. மூப்பனார் அவர்களை 'இதற்கு முன்னரேயே தெரியும், இன்று மறுமுறையும் பார்க்கும்படியானவாய்ப்பு கிடைத்தமைக்கு மகிழ்கின்றேன்,

தபால் இலாகா டைரெக்டர் அவர்களை இன்றுதான் பார்க்கும்படியான வாய்ப்பு கிடைத்தது. கண்டு மிக்க மகிழ்வடைகின்றேன்.

தோழர்களே! இந்த மாநாட்டில் நான் என்ன பேசுவது என்று எனக்குத் தோன்றவில்லை. மாநாட்டின் அடிப்படைத் தத்துவமே குறைபாடுகள் நீக்கப்பட வேண்டும் என்பதற்காகவேயாகும்.

#### பல கட்சி கொள்கைகளால் தொல்லை

நமது நாடு ஒரு நாடு என்று சொல்லும்படியான தன்மையை உடைய நாடு அல்ல. மிகவும் கஷ்டமான நாடு ஒரு நாட்டில் பல இனம், பல சாதி, பல மதம் இருந்தாலே ஒரு கொள்கை, ஒரு லட்சியம் இருக்காது. அடுத்து இந்த நாட்டில் பல கட்சிகள், பல கொள்கைகள் இருக்கின்றன. இதுகள் ஒரு பெரிய சங்கடம் மற்றவனுக்குத் தொல்லை கொடுக்கவேண்டும் என்று கிளம்புவது இத்தனைக்கும் இந்த நாடு ஒரு ஜனநாயகநாடு என்று பெயர்.

#### சம்பள ஏற்றத்தாழ்வுகள் குறைக்கப்பட வேண்டும்

நீங்கள் சம்பள உயர்வு மட்டும் கேட்கின்றீர்களே ஒழிய வந்த காசை வகையாகச்செலவு செய்யத் தெரியாமல் கோயில், குளம், பண்டிகை என்று பாழாக்கிவிடுகிறீர்கள்.

நான் கூறும் கருத்துக்கள் உங்களுக்கு கசப்பாகத்தான் இருக்கும் நான் உங்களுக்கு கூறுவது எல்லாம் உங்கள் பிள்ளைகளை என்ன பண்ணியாவது இந்த வேலையில்சேர்க்காதீர்கள் என்பதே.

தோழர்களே! ஒருவருக்கு ரூ 500.—1000 சம்பளம் ஒருவருக்கு ரூ 80,—90 என்று இருந்தால் எப்படி திருப்தி அடைய ஏற்படும்? 100 கொடுத்தாலும் 150தானே கேட்கத் தோன்றும்? சுதந்தரமான தொழில் செய்வது மூலம்தான் திருப்தி ஏற்படும் எனவே இப்படி மலைக்கும் மடுவுக்குமாக உள்ள ஏற்ற தாழ்வு குறைக்கப்படவேண்டும்.

என் பையனுக்கு பெரிக்கடலை கடை வைத்துக் கொடுத்துப் பிழைக்கச் செய்தாலும் செய்வேனே ஒழிய இப்படி கீழ்த்தர சிப்பந்தி வேலைக்கு அனுப்பி குறைந்த சம்பளம் பெறச்செய்ய மாட்டேன் என்று கருதவேண்டும்.

#### அரசியல் கட்சிகளால் விளையும் கேடு

கட்சிகள் ஏற்பட்ட பிறகு

3ம் பக்கம் பார்க்க